பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 06 2024 **FRIDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நீட் விவகாரத்தை எழுப்பி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதன் காரணமாக, மக்களவை நடவடிக்கைள் நாள் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்பட்டன. மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பில் ஈடுபட்டன.

- நாடாளுமன்ற நடவடிக்கைகளை முடக்க வேண்டும் என்று திட்டமிட்டு எதிர்க்கட்சிகள் செயல்படுவதாக மத்திய அரசு குற்றம் சாட்டியுள்ளது.

- விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌகான் தெரிவித்துள்ளார்

- சட்டம் ஒழுங்கை பராமரிப்பதில் தமிழகம் தலைசிறந்து விளங்குவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

- யூரோ கோப்பை பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

>>>>>><<<<<

நாடாளுமன்றத்தில் நீட் விவகாரத்தை எழுப்பி, எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதன் காரணமாக, மக்களவை நடவடிக்கைகள் நாள் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

இன்று பேரவை கூடியதும், நீட் பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி வலியுறுத்தினார்.

இதற்கு அனுமதி மறுத்த அவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது, இதர பிரச்சினைகளுக்கு அனுமதி இல்லை என்றார்.

இதன் காரணமாக எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து அவை முதலில் நண்பகல் வரையிலும், பின்னர் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இப்பிரச்சினை குறித்து விவாதிக்க அனுமதி மறுக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், வெளிநடப்பில் ஈடுபட்டனர்.

முன்னதாக, குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தை தொடங்கி வைத்துப் பேசிய பிஜேபி உறுப்பினர் திரு. சுதான்சு திரிவேதி, பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு உயர்ந்துள்ளதாக கூறினார்.

மத்திய அரசு கடந்த பத்தாண்டுகளில் நிறைவேற்றியுள்ள திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, பொருளாதாரம் விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாகவும் திரு. சுதான்சு திரிவேதி தெரிவித்தார்.

>>>>>><<<<<

நாடாளுமன்ற நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெறக்கூடாது என்று முன்கூட்டியே திட்டமிட்டு எதிர்க்கட்சிகள் செயல்படுவதாக நாடாளுமன்ற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாடாளுமன்றத்தில், குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும்

தீர்மானத்தின் போது இதர பிரச்சினைகள் குறித்து விவாதிக்க அனுமதிக்கப்படமாட்டாது என்றார்.

இருப்பினும் எதிர்க்கட்சிகள், நீட் விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டது ஏற்படையதல்ல என்றும் திரு. கிரண் ரிஜிஜு கூறினார்.

>>>>>><<<<<

நீட் விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. கே.சி. வேணுகோபால் வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆயிரக்கணக்கான மாணவர்கள் சார்ந்த முக்கியமான பிரச்சினை இது என்றார்.

இதனை கருத்தில் கொண்டு எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்க வேண்டும் என்றும் திரு. கே.சி. வேணுகோபால் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<

விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌகான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் வேளாண் கட்டமைப்பு நிதியத்தின் கீழ், வட்டி மானிய சலுகைகளை வங்கிகள் பெறுவதற்கான இணையதள சேவையை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்த நிதியத்தின் கீழ் 72 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் பெறப்பட்டதாக அவர் கூறினார்.

இதில் 43 ஆயிரம் கோடி ரூபாய் பல்வேறு வேளாண் பணிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

>>>>>><<<<<

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்தியா முழுவீச்சில் மேற்கொண்டு வருவதாக சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

பிரிக்ஸ் அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் சுற்றுச்சூழல் அமைச்சர்கள் பங்கேற்ற மாநாட்டில் காணொலி வாயிலாக பங்கேற்று அவர் உரையாற்றினார்.

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்காக அளித்த உறுதிமொழிகளை வளர்ச்சியடைந்த நாடுகள் நிறைவேற்ற வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இயற்கையோடு இயைந்த வாழ்க்கைமுறை பின்பற்றப்பட வேண்டியதன் அவசியத்தையும் திரு. புபேந்தர் யாதவ் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<

வெளியுறவுத்துறை செயலராக திரு. **Vikram Misri** நியமிக்கப்பட்டுள்ளார்.

நியமனங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளது.

தற்போது இப்பொறுப்பை வகிக்கும் திரு. வினெய் க்வட்ராவின் பதவிக்காலம் அடுத்த மாதம் 15ஆம் தேதி முடிவடைவதை ஒட்டி, திரு. விக்ரம் மிஸ்ரி அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

>>>>>><<<<<

தேசிய தேர்வு முகமையை வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களிடம், அதற்காக நியமிக்கப்பட்ட உயர்நிலை குழு கருத்துகளை கோரியுள்ளது.

அடுத்த மாதம் 7ஆம் தேதிவரை கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று கல்வித்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<

முன்னாள் பிரதமர் நரசிம்ம ராவின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், நாட்டின் வளர்ச்சிக்கு நரசிம்ம ராவ் ஆற்றிய பங்களிப்பு இன்றியமையாதது என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா விருதை, நரசிம்ம ராவிற்கு தமது தலைமையிலான அரசு தான் வழங்கி கவுரவித்ததாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>>><<<<<

சட்டம் ஒழுங்கை பராமரிப்பதில் தமிழகம் தலைசிறந்த இடத்தை பிடித்துள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று சட்டப்பேரவையில் தமது துறை மானிய கோரிக்கையை தாக்கல் செய்து அவர் பேசினார்.

மாநிலத்தில் பெரிய அளவு மோதல்கள் எதுவும் நடைபெறவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் புழக்கத்தை தடுப்பதற்கும் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு. மு.க.ஸ்டாலின் கூறினார்.

>>>>>><<<<<

தமிழகத்தின் ஊட்டி மற்றும் கொடைக்கானலுக்கு செல்லும் சுற்றுலா பயணிகளுக்கு இ-பாஸ் வழங்கும் நடைமுறையை செப்டம்பர் மாதம் 30ஆம் தேதிவரை நீட்டித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது நீதிபதிகள் திரு. சதிஷ்குமார், திரு. பரதசக்கரவர்த்தி அமர்வு இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

>>>>>><<<<<

ஆந்திராவில் **Polavaram** திட்டம் தொடர்பான வெள்ளை அறிக்கையை அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு இன்று வெளியிட்டார்.

இத்திட்டத்தின் தற்போதைய நிலை, ஒப்பந்த புள்ளிகளின் நிலவரம் போன்ற விவரங்கள் இதில் இடம்பெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>>>><<<<<**

தெலங்கானாவில் **BRS** சட்டப்பேரவை உறுப்பினர் திரு. **Kale Yadayah** காங்கிரஸில் இணைந்தார்.

தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி முன்னிலையில் அவர் காங்கிரஸ் கட்சியில் இணைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>>>><<<<<**

சட்டவிரோத பணப்பரிவர்த்தனை வழக்கில் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவர் திரு. ஹேமந்த் சோரன் இன்று ஜாமினில் விடுவிக்கப்பட்டார்.

முன்னதாக இந்த வழக்கில் ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றம் திரு. ஹேமந்த் சோரனுக்கு ஜாமின் வழங்கியது.

>>>>>><<<<<

ஈரான் அதிபர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று நடைபெற்றது.

அந்நாட்டு அதிபர் **Ibrahim Raisi** ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்ததை அடுத்து, அடுத்த ஆண்டு நடைபெறவிருந்த தேர்தல் தற்போது முன்கூட்டியே நடைபெற்றது.

>>>>>><<<<<

தில்லியில் பெய்த கனமழை காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு பகுதிகளில் வெள்ள நீரால் சூழப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதன் காரணமாக கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

தில்லி விமான நிலையத்தின் மேற்கூரை சரிந்து விழுந்ததில், ஒருவர் உயிரிழந்தார், நான்கு பேர் காயமடைந்தனர்.

கனமழை காரணமாக இந்த விபத்து நேரிட்டதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை தெரிவித்துள்ளது.

இப்பகுதியை ஆய்வு செய்த அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு, பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், பாதிப்புக்குள்ளான ஒன்றாவது முனையத்தில் இயக்கப்படவிருந்த விமானங்கள் பிற முனையங்களுக்கு மாற்றப்பட்டதாக கூறினார்.

இந்த விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவோரையும் அமைச்சர் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு 20 லட்சம் ரூபாயையும், காயமடைந்தவர்களுக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிதியுதவியையும் தில்லிவிமான நிலையம் அறிவித்துள்ளது.

கனமழை காரணமாக, மெட்ரோ ரயில் சேவையும் இரண்டு இடங்களில் பாதிக்கப்பட்டது.

>>>>>><<<<<

யூரோ கோப்பை பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

செக் குடியரசின் **Nove Mesto-**வில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் **Sheetal Devi - Sarita** இணையும், **Pooja** இணையும் தங்கப்பதக்கம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவில் ராகேஷ் குமார் – ஷ்யாம் சுந்தர் சுவாமி இணை வெள்ளிப்பதக்கத்தையும், **Harvinder Singh - Sahil** இணை வெண்கலப்பதக்கத்தையும் வென்றது.

**>>>>>><<<<<**

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் **Shafali Verma** இரட்டை சதம் அடித்தார்.

சென்னையில் இன்று தொடங்கிய இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா ஆட்டநேர இறுதியில் முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட் இழப்புக்கு 525 ரன் எடுத்துள்ளது.

**Shafali Verma** அபாரமாக ஆடி இரட்டை சதம் அடித்து, 205 ரன்னுக்கு ஆட்டமிழந்தார்.

**Smriti Mandana** சதம் அடித்து 149 ரன்னுக்கு ஆட்டமிழந்தார்.

**Harmanpreet Kaur** 42 ரன்னுடனும், **Richa Ghosh** 43 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

>>>>>><<<<<

ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டி இந்தோனேஷியாவில் இன்று தொடங்கியது.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியா 5-0 என்ற ஆட்டக்கணக்கில் வியட்நாமை வென்றது.

>>>>>><<<<<

துனிஷ்யாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manush Shah – Diya Chitale** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 3-0 என்ற ஆட்டக்கணக்கில் தென்கொரியாவின் **Kim Woojin – Yo Siwoo** இணையை வென்றது.

>>>>>>**END**<<<<<